**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. M. சண்முககனி, பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2026ம் வருடம் மார்ச் மாதம் 07ம் நாள் சனிக்கிழமை

**இடைக்கால மனு எண்.7/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.25/2021**

1. M. முருகன்
2. சுப்பையா ..மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

..எதிர்..

I. பூமாதேவி ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 04.03.2026–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.நாகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியை மீண்டும் அழைத்து உத்திரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 பிரிவு 151 ன் படி கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும் அசல் வழக்கில் இந்த மனுதாரர் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் தற்போது அசல் வழக்கு பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும் பி.வா.சா.ஆ.1 சாட்சியத்தின் போது 10.09.2001 தேதிய உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தின் அசல் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்ததை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்த இ.ம.எண்.6/2025 அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தை இந்த மனுதாரர்கள் தரப்பு ஆவணமாக அசல் வழக்கில் குறியீடு செய்யவதற்காக பி.வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர் வேண்டுமென்றே வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கில், மேற்படி ஆவணத்தை தனது முதல் விசாரணையின் போது தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி, பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டு வரும் நிலையில, தற்போது மீண்டும் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சியை மீண்டும் அழைத்து மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்து, மேற்படி அசல் வழக்கு நடவடிக்கைகளை காலம் தாழ்த்தி வருகிறார் என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் வேண்டுமென்றே வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கில், மேற்படி ஆவணத்தை தனது முதல் விசாரணையின் போது தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி, பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டு வரும் நிலையில், தற்போது மீண்டும் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சியை மீண்டும் அழைத்து மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் அசல் வழக்கு பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும் பி.வா.சா.ஆ.1 சாட்சியத்தின் போது 10.09.2001 தேதிய உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தின் அசல் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்ததை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்த இ.ம.எண்.6/2025 அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தை இந்த மனுதாரர்கள் தரப்பு ஆவணமாக அசல் வழக்கில் குறியீடு செய்யவதற்காக பி.வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடுக்கும் விதமாகவும் இந்த மனுவை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI
Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.07 17:50:37 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

SHUNMUGA KANI
Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.07 17:51:06 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.